திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், திருவள்ளூர் – 602 001.
பிறப்பிப்பவர்: திருமதி.தி.மலர்விழி, எம்.எஸ்சி, எம்.எட்

ஸ்ரீஜய வருடம் மார்கழி திங்கள் ஆம் நாள், திருவள்ளுவராண்டு–2045
ந.க.எண். 5250/அ1/2014 நாள் 12.01.2015

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி– திருமதி.வி.காஞ்சனா, தட்டச்சர், உதவி தொடக்கக்கல்வி அலுவலகம், காஞ்சிபுரம் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை: 1)திருவள்ளூர் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.691/அ1/2013 நாள்:26.02.2013
2)சென்னை–06, தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்
ந.க.எண்.005718/அ2/2014 நாள்:03.02.2014
3)காஞ்சிபுரம், உதவி தொடக்கக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1101/அ1/2014 நாள்:09.10.2014

-------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2007–2008 முதல் 2012–2013 மூலம் தட்டச்சராக பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டும் பார்வை –1ல் குறித்துள்ள இவ்வலுவலக செயல்முறைகளின்படி தட்டச்சராக நியமன ஆணை ஆணைகள் வழங்கப்பட்டு 27.02.2013 முற்பகல் முதல் பூந்தமல்லி, உதவி தொடக்கக்கல்வி அலுவலகத்தில் பணிபுரிந்து பார்வை 2ல் குறித்துள்ள செயல்முறைகளின்படி பணிமாறுதல் பெற்ற 28.02.2014 முற்பகல் முதல் காஞ்சிபுரம், உதவி தொடக்கக்கல்வி அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வரும் திருமதி.வி.காஞ்சனா என்பாருக்கு பார்வை 3–ல் குறித்துள்ள, உதவி தொடக்கக்கல்வி அலுவலரின் பரிந்துரையின்படி அன்னார் தட்டச்சர் பணியில் சேர்ந்த நாளான 27.02.2013 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

1. தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக் காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. பணிவரன்முறை செய்யப்பட்ட இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் கணினிக் கல்வித் தகுதியை Certificate Course in Computer on "Office Automation" awarded by Directorate of Technical Education தவறாமல் நிறைவு செய்யப்பட வேண்டும்.
3. தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்கப்படும்.

பணிப்பதிவேடு பெற்றுமைக்கு உடன் ஒப்புதல் வழங்குமாறு கோரப்படுகிறது.

இணைப்பு : பணிப்பதிவேடு (அசல்)

மாவட்டக் கல்வி அலுவலர்
திருவள்ளூர்.

பெறுநர் சம்பந்தப்பட்ட நபர்
(உதவி தொடக்கக்கல்வி அலுவலர் மூலமாக)
நகல்: உதவி தொடக்கக்கல்விஅலுவலகம், காஞ்சிபுரம்

உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்,
காஞ்சிபுரம்-631 502